# இராணிப்பேட்டை நகராட்சி

## 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11 – ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 02.30 மணி அளவில் நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

## தலைமை :– திருமதி க. சுஜாதா வினோத், நகர்மன்றத் தலைவர்

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 11.04.2022 | **<u>பொருள் எண்.1</u>**<br>தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.<br><br>15–வது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.<br><br>அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்துவரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன்படி, சொத்துவரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்துவரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது. | நகர்மன்றத் தீர்மான எண் 57 அலுவலக குறிப்பு 1,2 அனுமதிக்கப்பட்டது |

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்துவரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடஙகள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**<u>காலிமனைவரி சீராய்வு:</u>**

காலிமனைவரி விதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனைவரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி விதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்துவரியுடன் சேர்த்து காலிமனைவரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனைவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போதுவரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் இராணிப்பேட்டை நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்க்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | 3.53 |
| 2 | பிற துறைகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 1.36 |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிட்செல், பிற) | 28.07 |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி, நகராட்சியின் பங்கு தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 2.75 |
| | **மொத்தம்** | **35.71** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும்

கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், இராணிப்பேட்டை நகராட்சியில் கீழ்க்கண்டவாறு சொத்துவரி / காலிமனைவரி உயர்வு செய்து பொதுசீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனைவரி பொது சீராய்வு செய்யலாம்.
8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1) அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022–ன்படி மன்றம் பதிவு செய்யலாம்
2) மேற்படி அரசாணையின் வழிகாட்டுதலின்படி சொத்துவரி பொது சீராய்வு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1230/2022/அ1)**

| 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29–ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 2.30 மணி அளவில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் | | |
|---|---|---|
| **மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள்** | **வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள்** | **மன்றத்தின் தீர்மானம்** |
| **29.04.2022** | **பொருள் எண்.58**<br>இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச் 2022 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண்.1193/2022/சி1)** | நகர்மன்றத் தீர்மான எண். 58 அனுமதிக்கப்பட்டது. |
| **29.04.2022** | **பொருள் எண்.59**<br>இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச் 2022 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>**(ந.க.எண்.1194/2022/சி1)** | நகர்மன்றத் தீர்மான எண். 59 அனுமதிக்கப்பட்டது. |
| **29.04.2022** | **பொருள் எண்.60**<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாரச்சந்தை அருகில் உள்ள அம்மா உணவகம் இயங்கி வருகிறது. இந்த அம்மா உணவகம் இயங்கத் தேவையான உணவு பொருள் இரசீது அச்சடிக்க காய்கறிகள், பால், எரிவாயு எழுது பொருட்கள் மற்றும் அம்மா உணவகத்தில் வேலை செய்யும் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, ஊதிய செலவினங்கள் மேற்கொள்ள வருவாய் நிதியிலிருந்து 2022–2023 நிதியாண்டிற்கு ரூ.45.00 இலட்சம் (நாற்பத்து ஐந்து இலட்சம்) செலவு செய்வதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** | நகர்மன்றத் தீர்மான எண். 60 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1) அவசர அவசியம் கருதி நகரமன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அம்மா உணவகத்திற்கு தேவையான உணவு விநியோக பொருட்கள் டோக்கன், இரசீது, கூட்டுறவு அச்சகம் நாப்கோ பிரிண்ட், வேலூர் அச்சடித்து பெற்றுக்கொள்ளவும், அதற்கான செலவினத்திற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3) அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் திரு.பி.விக்னேஷ்வரன் என்பவரிடம் வாங்கிக் கொள்ளவும், பால், எரிவாயு எழுது பொருட்கள் மற்றும் இதர செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>4) அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள் திரு.பிவிக்னேஷ்வரன் என்பவரிடம் நேரடியாக வாங்கிக் கொள்ளவும் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>5) அம்மா உணவகத்தில் வேலை செய்யும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஊதியம் இதர செலவினங்கள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிஅளிக்கலாம்.<br>**(ந.க.எண்.2860/2014/அ3)** | |
| **29.04.2022** | **பொருள் எண்.61**<br>இராணிப்பேட்டை நகராட்சி 01.04.1959 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்ட பழமையான நகராட்சியாகும். பின்னர் 05.10.1978 முதல் இராண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டும், 22.05.1998 முதல் முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டும், 02.12.2008 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தற்போது 55,840 மக்கள் தொகை கொண்டதாகவும், 8.52 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாகவும், 30 வார்டுகளை உள்ளடக்கிய தேர்வுநிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் நடைபெறும் திட்ட பணிகளை கவனிக்கவும், பொதுமக்களிடமிருந்து அடிப்படை வசதி செய்து தரக்கோரி வரப்பெறும் மனுக்களின் மீது உடனுக்குடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தீர்வு செய்யவும் ஏதுவாக நகரமன்றத் தலைவர் அவர்களுக்கும், நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கும் புதியதாக (Mahindra –Bolero) ஈப்பு வாகனங்கள் காப்பீடு மற்றும் பதிவு கட்டணங்கள் உட்பட தோராயத் தொகை ரூ.10.53 இலட்சம் வீதம் இரண்டு (Mahindra –Bolero) ஈப்பு வாகனங்கள் மொத்த தொகை ரூ.21.06 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியிலிருந்து வாங்கி பயன்படுத்துவதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறுவதற்கு கருத்துரு தயார் செய்து மேலனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகரமன்றத் தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோரின் அலுவலக பயன்பாட்டிற்கு புதியதாக இரண்டு (Mahindra –Bolero) ஈப்பு வாகனங்கள் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் அனுமதி பெற கருத்துரு மேலனுப்பி வைத்தமைக்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1211/2022/இ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 61 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 29.04.2022 | <u>**பொருள் எண்.62**</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN73Q9747 லாரியில் உள்ள கிளட்ச்பிளேட், கிளட்ச்கிட் மற்றும் கியர் விம் பழுதடைந்துள்ளதால், வண்டியிலுள்ள பழுதுகளை சரி செய்ய ASHOK LEYLAND, Ranipet (Truckz, Zone) நிறுவனத்தில் வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்காகும் தோராய செலவினம் ரூ.53,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :—**</u><br>1. மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>3. மேற்படி செலவினத் தொகை ரூ.53,000/—யை 2022—2023 ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>**(ந.க.எண்.1012/2022/எச்1)** | நகர்மன்றத் தீர்மான எண். 62 அனுமதிக்கப்பட்டது. |
| 29.04.2022 | <u>**பொருள் எண்.63**</u><br>இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரிக்கும் MCC மற்றும் RRC —யில் பயன்படுத்தப்படும் எடை போடும் எடை மிஷின் 6 எண்ணிக்கை பழுதடைந்துள்ளதால், அதனை பழுது நிவர்த்தி செய்ய ஆகும் தோராய செலவினம் தொகை ரூ.30,000/—க்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :—**</u><br>1. மன்றம் அனுமதியளிக்கலாம்<br>2. மேற்படி 6 எண்ணிக்கை எடை மிஷின் பழுது நீக்கும் பணிக்கு முன் அனுமதி பெற்று விலைப்புள்ளிக் கோர மன்றம் அனுமதியளிக்கலாம்.<br>3. மேற்படி தொகை ரூ.30,000/—யை 2022—2023 ஆம் ஆண்டு பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>**(ந.க.எண்.1110/2022/எச்1)** | நகர்மன்றத் தீர்மான எண். 63 அனுமதிக்கப்பட்டது. |
| 29.04.2022 | <u>**பொருள் எண்.64**</u><br>இராணிப்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட புலித் தெருவில் வசிக்கும் திருமதி.எ.எஸ்.சர்பூன் க/பெ.திரு.அப்துல்சுபான், என்பவர் நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக இணைத்து சென்னை உயர்நீதிமன்றத்தில் W.P.No.9456/2022—ல் வழக்கு தொடரப்பட்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br><u>**அலுவலக குறிப்பு :—**</u><br>சென்னை உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்.C.N.P.No.70/2022 தொடர்பான மேற்படி புலித் தெரு சந்து தெரு ஆய்வு செய்யப்பட்டதில் திருமதி.எ.எஸ்.சர்பூன், க/பெ. அப்துல்சுபான், மற்றும் 4 நபர்கள் நகர நில அளவை ஆவணங்களின்படி, வார்டு எண்.'பி', பிளாக் எண். '35' , நகரளவு எண்.22 கொண்ட புலித் தெரு வழி பாதையினை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களை ஏழு (07) நாட்களுக்குள் இடித்து அப்புறப்படுத்த வேண்டி 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் | நகர்மன்றத் தீர்மான எண். 64 அனுமதிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | சட்டம் அவ்வப்பொழுது திருத்தப்படும் மாறுதலுக்குட்பட்டு மேற்படி சட்ட பிரிவு 182, 188, 339 (3) , 340 (1) மற்றும் 344 ஆகிய பிரிவுகளின்படி அறிவிப்பு வழங்கப்பட்டது.<br>மேற்படி வழங்கப்பட்ட அறிவிப்பின் மீது வாதி திருமதி.எ.எஸ்.சர்பூன், க/பெ. அப்துல்சுபான் அவர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கை நடத்திட திரு.பி.சீனிவாஸ், உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை கோரியதற்கும் மேற்படி வழக்கிற்கான கட்டணம் ரூ.15000/- வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1286/2022/எப்1)** | |
| **29.04.2022** | **<u>பொருள் எண்.65</u>**<br>இராணிப்பேட்டை நகராட்சியில் 15th CFC 2021-22ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கையினை மாநில அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான கட்டணத்தொகை ரூ.45,410/- விளம்பரம் செய்த M/S.SRESHTA COMUNICATIONS, CHENNAI-17 நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) விளம்பர கட்டணத்தொகை ரூ. 45410/- இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.2068/2021/இ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 65 அனுமதிக்கப்பட்டது. |
| **29.04.2022** | **<u>பொருள் எண்.66</u>**<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.52 சொத்துவரி /காலிமனைவரி பொதுசீராய்வு செய்ய ஆணையிடப்பட்டுள்ளதின் பேரிலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1 ,01.04.2022 சுற்றறிக்கையின்படியும், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 30 வார்டுகளிலும் குடியிருப்பு, வணிகப்பயன்பாடு மற்றும் தொழிற்கூடங்களுக்கு 01.04.2022 முதல் சொத்துவரி சீராய்வு மேற்கொள்ள தினசரி நாளிதழில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் விளம்பரப்படுத்தப்பட்டதற்கும் மற்றும் சொத்துவரி சுயமதிப்பீட்டு படிவங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்துக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.4,00,000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலககுறிப்பு :-</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. விளம்பரப்படுத்தியமைக்கும், அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு அச்சகத்தில் அச்சடித்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.1230/2022/அ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 66 அனுமதிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td>29.04.2022</td>
<td>
<u>பொருள் எண்.67</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை பிரிக்கும் MCC மற்றும் RRC –ல் பயன்படுத்தப்படும் எடைபோடும் எடை மிஷின் 6 எண்ணிக்கை பழுதடைந்துள்ளதால் அதனை பழுது நிவர்த்தி செய்ய விலைப்புள்ளி 08.04.2022–ல் கோரியதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின்பெயர்</th><th>விலைப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td>1</td><td>Gokul Scale Service, 65 , Ganesa Puram Line, Madras</td><td>ரூ.38500/–</td></tr>
<tr><td>2</td><td>S.R.Kaleeswarii Scale Service,25/A, Chawk Jamiya masjid Complex Bazzar Street, Ranipet</td><td>ரூ.25800/–</td></tr>
<tr><td>3</td><td>Arasan Weighing Service 102, Nainiappa Naicken Street, Park Town, Madras</td><td>ரூ.33500/–</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு :–</u><br>
1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
2. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள S.R.Kaleeswarii Scale Service Ranipet அவர்களின் குறைந்த விலைப்புள்ளி ரூ.25,800/–யை ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
3. மன்ற தலைவரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>
(ந.க.எண்.1110/2022/எச்1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 67 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>29.04.2022</td>
<td>
<u>பொருள் எண்.68</u><br>
இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் எதற்கும் பயன்படுத்தாத கழிவுகளை லாரியில் ஏற்றுவதற்கு ஜே.சி.பி. வாகனம் வாடகை எடுத்து பயன்படுத்தும் பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி 06.04.2022–ல் கோரியதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம் ( ஒரு மணி நேரத்திற்கு)</th></tr>
<tr><td>1</td><td>திரு.P.Vigneshwaran, PVK Street, Karai, Ranipet</td><td>ரூ.800/–+GST</td></tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 68 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>RJS Construction, 45, Othavadai Street, Navalpur, Ranipet</td><td>ரூ.780/–+GST</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2–ல் கண்டுள்ள RJS Construction, 45, Othavadai Street, Navalpur, Ranipet அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.16/2022/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.04.2022</td>
<td>
<u>பொருள் எண்.69</u><br>
இந்நகராட்சிக்கு எதிராக திரு.எ.எஸ்.ஷர்பூன் க/பெ.அப்துல்சுபான் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு C.P.No.70/2022 of (Writ Petition No.8928/2020)–ல் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கு நடத்துவதற்காக திரு.பி.சீனிவாஸ் அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றம் அவர்களுக்கு வழக்கு கட்டணமாக தொகை ரூ.15000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்<br>
2) மேற்படி வழக்கு கட்டணம் தொகை ரூ.15000/–இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.2100/2020/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 69 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td></td>
<td>
<u>பொருள் எண்.70</u><br>
இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளில் உள்ள வரிவிதிப்புதாரர்கள் இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி மற்றும் கடை வாடகையினை (நிலுவை மற்றும் நடப்பு) நிலுவையின்றி உடனடியாக முழுமையாக செலுத்தக்கோரி ஆட்டோ ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்வதற்கும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.40,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு :–</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படி பணிக்கான செலவினம் ரூ.40,000/– இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.453/2021/அ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 70 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td></td></tr>
<tr><td>29.04.2022</td><td><u>பொருள் எண்.71</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரையிலான பகுதிகளில் உள்ள வரிவிதிப்புதாரர்கள் இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி, குடிநீர் வரி, தொழில்வரி மற்றும் கடை வாடகையினை (நிலுவை மற்றும் நடப்பு) நிலுவையின்றி உடனடியாக முழுமையாக செலுத்துவதற்காக ஆட்டோ வாகனம் மூலம் விளம்பரம் செய்திடவும், அதற்கான தோராய செலவினம் ரூ.40,000/-ற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்படி ஆட்டோ மூலம் விளம்பரம் செய்திடும் பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் கோரியதில் 11.03.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ.எண்.</th><th>ஒப்பந்ததாரர்பெயர்</th><th>நாள் ஒன்றுக்கு தொகை ரூ</th></tr><tr><td>1</td><td>கே. கண்ணப்பன் த/பெ.கருணாகரன், எண்.3, மண்டித் தெரு, இராணிப்பேட்டை</td><td>2300/-</td></tr><tr><td>2</td><td>டி.விஜயா, எண்.7, முதல் தெரு, பெரியார் நகர், இராணிப்பேட்டை</td><td>2250/-</td></tr><tr><td>3</td><td>ஆர். அரசு, எண்.2/78, குட்டைக்கரைத் தெரு, ஆற்காடு.</td><td>2100/-</td></tr></table><br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1) மன்றம் அனுமதி அளிக்கலாம்<br>2) மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 3-ல் கண்டுள்ள ஆர். அரசு, எண்.2/78, குட்டைக்கரைத் தெரு, ஆற்காடு. அவர்களின் குறைவான விலைப்புள்ளியினை மன்றம்அனுமதிக்கலாம்.<br>3) அவசர அவசியம் கருதி நகரமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்றத் தலைவர் அவர்கள் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி கோரியதற்கும், தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.0453/2021/அ1)</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 71 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>29.04.2022</td><td><u>பொருள் எண்.72</u><br>இராணிப்பேட்டை நகராட்சிப்பகுதியில் கீழ்கண்ட விவரப்படி பணிகள் செய்ய குடிநீர் நிதி (ம) பொது நிதியின் கீழ் இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1115/2022/இ1 நாள் 06.04.2022ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 21.04.2022 அன்று கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 72 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்தில் உள்ள MCC நுண்ணுரமாக்கல் மையத்தில் உள்ள ஸ்டெர்டிங்மிஷின் பழுது நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்தல். | 2.50 | திரு.டி.சி.ஐயப்பன், 3, தந்தைபொரியார் தெரு, பிஞ்சி, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.05 % குறைவு |
| | | | RJS Construction. 45, ஒத்தவாடைத்தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.25 % அதிகம் |
| 2 | சந்தைமேடு பகுதியில் உள்ள MCC நுண்ணுரமாக்கல் மையத்தில் பழுது நீக்கம் செய்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்தல். | 3.80 | திரு.டி.சி.ஐயப்பன், 3,தந்தைபொரியார் தெரு, பிஞ்சி, இராணிப்பேட்டை . | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு |
| | | | RJS Construction. 45 ஒத்தவாடைத்தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.47 % அதிகம் |
| 3 | வார்டு எண்.22 சந்தை மைதானத்தில் உள்ள மீன் அங்காடியில் கழிவுநீர் கால்வாய் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணி செய்தல். | 3.00 | பி.விக்னேஷ்வரன், 11, பி.வி.கே.தெரு, காரை, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு |
| | | | RJS Construction. 45 ஒத்தவாடைத்தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.48 % அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | காரை நகராட்சி பள்ளியில் புதியதாக ஆழ்துளை கிணறு மற்றும் சிறுமின்விசை பம்ப் அமைத்தல் | 1.50 | பி.விக்னேஷ்வரன், 11, பி.வி.கே.தெரு, காரை, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.13 % குறைவு |
| | | | RJS Construction. 45 ஒத்தவாடைத்தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.69 % அதிகம் |

<u>அலுவலககுறிப்பு</u>

1) மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்
2) மேற்படி பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் . 1115/2022/இ1)**

**29.04.2022**

<u>பொருள் எண்.73</u>

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆர்.எஸ்.ரோடு நகராட்சி அலுவலகம் முன்பகுதி, கெல்லீஸ் சாலை, வண்டிமேட்டுத்தெரு பகுதிகளில் பொதுநிதியின் கீழ் ரூ.990000/- மதிப்பீட்டில் LED Light பொருத்தவும் புதிய மின்கம்பம் பொருத்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 52 நாள் 31.03.2022-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 21.04.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.தணிகைவேல், நெ.50 பிள்ளையார் கோயில் தெரு, காட்டுப்பாக்கம், நெமிலிவட்டம் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 2 | RJS Construction, | மதிப்பீட்டை விட |

நகர்மன்றத் தீர்மான எண். 73 அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | எல்.ஆர் நிலையம்,<br>45 ஒத்தவாடைத்தெரு,<br>நவல்பூர், இராணிப்பேட்டை | 0.48% அதிகம் |

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதியளிக்கலாம்
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள திரு.தணிகைவேல், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழுங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1157/2022/இ1)**

**29.04.2022**

<u>பொருள் எண்.74</u>

இராணிப்பேட்டை நகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்ட விவரப்படி பணிகள் செய்ய பொது நிதியின் கீழ் இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண்.1152/2022/இ1 நாள் 04.04.2022–ன் படி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 22.04.2022 அன்று கீழ்கண்டுள்ளவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ.லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.4 MGR நகர் மற்றும் வார்டு எண்.5 அம்பேத்கர் நகர் கழிப்பிடங்களை பராமரிப்பு பணி செய்தல். | 3.20 | திரு.டி.சி.ஐயப்பன், 3,தந்தைபொரியார் தெரு, பிஞ்சி, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.07 % குறைவு |
| | | | RJS Construction. 45,ஒத்தவாடைத்தெரு, நவல்பூர்,இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.60 % அதிகம் |
| 2 | வார்டு எண்.8 லம்பா காலனி, வார்டு எண்.9 ஒட்டேரி கழிப்பிடங்களை பராமரிப்பு பணி செய்தல். | 3.60 | திரு.இராமமூர்த்தி, 1,பிள்ளையார் கோயில் தெரு, வள்ளலார்நகர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.07 % குறைவு |

நகர்மன்றத் தீர்மான எண். 74 அனுமதிக்கப்பட்டது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | எஸ்.அமரேந்திரன், நெ.6,மாரியம்மன்கோயில் தெரு, காகிதப்பட்டறை, வேலுர். | மதிப்பீட்டை விட 0.45 % அதிகம் | | |
| | 3 | வார்டு எண்.10 சீனிவாசன் பேட்டை மெயின்ரோடு பள்ளி அருகில் வார்டு எண்.11 ஜெயராம்பேட்டை கழிப்பிடங்களை பராமரிப்பு பணி செய்தல். | 5.50 | திரு.இராமமூர்த்தி, 1,பிள்ளையார் கோயில் தெரு, வள்ளலார்நகர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.07 % குறைவு | | |
| | | | | எஸ்.அமரேந்திரன், நெ.6,மாரியம்மன்கோயில் தெரு, காகிதப்பட்டறை, வேலூர். | மதிப்பீட்டை விட 0.56 % அதிகம் | | |
| | 4 | வார்டு எண்.11 பிஞ்சிஜெயராம் நகர், வார்டு எண்.12 பாஷாசாகிப் தெரு (ம) கிருஷ்ணகிரி டிரங்க் ரோடு கழிப்பிடங்களை பராமரிப்பு பணிசெய்தல். | 3.60 | திரு.டி.சி. ஐயப்பன், 3,தந்தைபொரியார் தெரு, பிஞ்சி, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு | | |
| | | | | RJS Construction. 45 ஒத்தவாடைத்தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.51 % அதிகம் | | |
| | 5 | வார்டு எண்.17 ப்ரெளன் ஹவுஸ், காட்டன் பஜார் தெரு, வார்டு எண்.18 லேபர்ஸ்கூல் தெரு, வண்ணாரப்பேட்டை ரோடு கழிப்பிடங்களை பராமரிப்பு பணி செய்தல். | 6.20 | பி.விக்னேஷ்வரன், 11,பி.வி.கே.தெரு, காரை, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு | | |
| | | | | RJS Construction. 45 ஒத்தவாடைத்தெரு, நவல்பூர், இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.62 % அதிகம் | | |
| | 6 | வார்டு எண்.21 RS ரோடு, வார்டு எண்.22 அம்பேத்கர் நகர் | 6.00 | திரு.கே,அசோக், 143எ,முத்துமாரியம்மன் கோயில் தெரு, சாமிநகர்,ஓட்டேரி, வேலூர் | மதிப்பீட்டை விட 0.08 % குறைவு | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கழிப்பிடங்களை பராமரிப்பு பணி செய்தல். | | திரு.டி,அருணகிரி, 23/87, பஜார் தெரு, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.59 % அதிகம் |
| 7 | வார்டு எண்.7 முத்துக்கடை பஸ் நிலையம்அருகில் வார்டு எண்.23 புதிய பேருந்து நிலையம்அருகில் உள்ள கழிப்பிடங்களை பராமரிப்பு பணி செய்தல் | 6.00 | திரு.எஸ்.எழில்வாணன், 9, பஜார் தெரு, லாலாப்பேட்டை. | மதிப்பீட்டை விட 0.09 % குறைவு |
| | | | திரு.டி.சி. ஐயப்பன், 3,தந்தைபொரியார் தெரு, பிஞ்சி, இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட 0.50 % அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) மேற்காணும் பணிகளுக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை சமர்பித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்க மன்றம் அனுமதியளிக்கலாம்
2) மேற்படி பணிகளுக்கு பணி உத்திரவு வழங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1152/2022/இ1)**

---

**29.04.2022**

**<u>பொருள் எண்.75</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரை உள்ள ஆழ்துளை கிணறுகள் மற்றும் சிறுமின்விசை மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை குடிநீர் நிதியின் கீழ் ரூ.700000/- மதிப்பீட்டில் பழுதுகள் நீக்கம் செய்தல் மற்றும் பராமரித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 44 நாள் 31.03.2022-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 26.04.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி.சி.ஐயப்பன்,<br>நெ.3, தந்தை பெரியார் தெரு,<br>பிஞ்சி, இராணிப்பேட்டை. | மதிப்பீட்டை விட<br>0.07% குறைவு |
| 2 | RJS Construction,<br>எல்.ஆர் நிலையம்,<br>45 ஒத்தவாடைத்தெரு, | மதிப்பீட்டை விட<br>0.42% அதிகம் |

நகர்மன்றத் தீர்மான எண். 75 அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>நவல்பூர், இராணிப்பேட்டை</td><td></td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.டி.சி.ஐயப்பன், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் . 1149/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.04.2022</td>
<td>
<u>பொருள் எண்.76</u><br>
இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்ள குடிநீர் நிதியின் கீழ் ரூ.990000/– மதிப்பீட்டில் தனியர் ஒப்பந்ததாரர் மூலம் மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் 4 பணியாளர்கள் (ம) 2 மேற்பார்வையாளர்கள் 2022–2023 ஆண்டிற்கு வழங்கிடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 50 நாள் 31.03.2022–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 26.04.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.தணிகைவேல்,<br>நெ.50 பிள்ளையார் கோயில் தெரு,<br>காட்டுப்பாக்கம், நெமிலிவட்டம்</td><td>மதிப்பீட்டை விட<br>0.20% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.டி.சி.ஐயப்பன்,<br>நெ.3, தந்தை பெரியார் தெரு,<br>பிஞ்சி, இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>0.76% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.தணிகைவேல், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.20% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 76 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>(ந.க.எண் . 1154/2022/இ1)</td><td></td></tr>
<tr><td>29.04.2022</td><td><u>பொருள் எண்.77</u><br>இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யும் பணிகளை மேற்கொள்ள குடிநீர் நிதியின் கீழ் ரூ.990000/– மதிப்பீட்டில் தனியர் ஒப்பந்ததாரர் மூலம் மாவட்ட ஆட்சியர் நிர்ணயிக்கப்படும் தினக்கூலி அடிப்படையில் 5 பணியாளர்கள் (ம) 1 எலக்ட்ரிஷ்யன் 2022–2023 ஆண்டிற்கு வழங்கிடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 51 நாள் 31.03.2022–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 26.04.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவீகிதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.தணிகைவேல்,<br>நெ.50, பிள்ளையார் கோயில் தெரு,காட்டுப்பாக்கம், நெமிலி வட்டம்</td><td>மதிப்பீட்டை விட<br>0.20% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.டி.சி.ஐயப்பன்,<br>நெ.3, தந்தை பெரியார் தெரு,<br>பிஞ்சி, இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>0.76% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1–ல் கண்டுள்ள திரு.தணிகைவேல், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.20% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழுங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் . 1155/2022/இ1)</td><td>நகர்மன்றத் தீர்மான எண். 77 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>29.04.2022</td><td><u>பொருள் எண்.78</u><br>இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகராட்சி எல்லைக்குள் இருக்கும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு வரும் பிரதான குழாயில் (Distribution Main) உடைப்பு ஏற்படுவதை குடிநீர் நிதியின் கீழ் ரூ.700000/– மதிப்பீட்டில் 2022–2023 ஆண்டிற்கு பராமரித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண்.46 நாள் 31.03.2022–ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 26.04.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர்</th><th>சதவிகிதம்</th></tr>
</table></td><td>நகர்மன்றத் தீர்மான எண். 78 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.அமரேந்திரன்,<br>நெ.6 மாரியம்மன் கோயில் தெரு<br>காகிதப்பட்டறை,<br>வேலூர். | மதிப்பீட்டை விட<br>0.08% குறைவு |
| 2 | கே.இராமமூர்த்தி,<br>290/2, விநாயகர் கோயில் தெரு,<br>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை | மதிப்பீட்டை விட<br>0.45% அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) மன்றம் அனுமதியளிக்கலாம்
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1- கண்டுள்ள திரு.எஸ்.அமரேந்திரன், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1151/2022/இ1)**

---

**29.04.2022**

**<u>பொருள் எண்.79</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 30 வரை உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் சப்ளை செய்யும் பிரதான குடிநீர் உந்து குழாய்களில் உடைப்பு ஏற்படுவதை குடிநீர் நிதியின் கீழ் ரூ.700000/- மதிப்பீட்டில் 2022-2023 ஆண்டிற்கு பராமரித்திடும் பணிக்கு நகரமன்ற தீர்மானம் எண். 45 நாள் 31.03.2022-ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 26.04.2022 அன்று கீழ்க்கண்டுள்ளவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் | சதவிகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.அமரேந்திரன்,<br>நெ.6 மாரியம்மன் கோயில் தெரு<br>காகிதப்பட்டறை,<br>வேலூர் | மதிப்பீட்டை விட<br>0.07% குறைவு |

நகர்மன்றத் தீர்மான எண். 79 அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>கே.இராமமூர்த்தி,<br>290/2, விநாயகர் கோயில் தெரு,<br>வள்ளலார் நகர்,<br>இராணிப்பேட்டை</td><td>மதிப்பீட்டை விட<br>0.48% அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலககுறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதியளிக்கலாம்<br>
2) மேற்கண்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1– கண்டுள்ள திரு.எஸ்.அமரேந்திரன், ஒப்பந்ததாரர் என்பவர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.07% குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
3) மேற்படி பணிக்கு பணி உத்திரவு வழங்கவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் . 1150/2022/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>29.04.2022</td>
<td>
<u>பொருள் எண்.80</u><br>
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 28 அவர்களின் செயல்முறை உத்தரவில் இராணிப்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு 2021–2022 சுகாதார பிரிவு மான்யம் NHM–ன் கீழ் நகர்புற சுகாதார நலமையம் (U–HWC) கட்டடம் வண்டிமேட்டுத்தெருவில் நகர்புற சுகாதார நலமையம் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு 07.01.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இவ்வலுவலக ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2359/2021/இ1 நாள் 25.01.2022ன் படி பணி உத்திரவு வழங்கப்பட்டது.<br>
மேற்படி பணிசெய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள இடத்திற்கு மிக அருகில் அரசு ஆரம்ப சுகாதார மையம் உள்ளதால் (Urban Primary Health Centre) வேறு பகுதிக்கு மாற்றித்தருமாறு துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், இராணிப்பேட்டை அவர்கள் தெரிவித்துள்ளதால் பிஞ்சி துரைசாமி லே–அவுட் சர்வே எண்.28/7 பழைய சர்வே எண்28ல் வீட்டு மனைப்பிரிவு அங்கீகார எண்.ம.ப/வ (வேத) எண்.68/82ல் நகராட்சிக்கு சொந்தமான பொது இடத்தில் மாற்றி கட்டவும் இப்பணியினை இதே ஒப்பந்ததாரர் மூலம் இதே விலை விகிதத்திற்கு செய்து முடிக்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2) 15வது நிதிக்குழு திட்டப்பணி என்பதால் நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண். 2359/2021/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 80 அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>29.04.2022</td>
<td><u>பொருள் எண்.81</u></td>
<td>நகர்மன்றத் தீர்மான எண். 81</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் 2022-23 சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக மான்யகோரிக்கையின் போது மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் ரூ.100.00 கோடி மதிப்பீட்டில் 200 பூங்காக்கள் அமைக்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் இயக்குநர் சென்னை 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2022/தி2-1 நாள் 19.04.2022ல் இராணிப்பேட்டை நகராட்சியில் வார்டு எண்.28 மகாவீர் நகர் பகுதியில் உள்ள கீரின் பார்க் பூங்காவினை தொகை ரூ.95.00 இலட்சம் மதிப்பீட்டிலும், வார்டு எண்.28 பி.வி.தியாகராஜன் பூங்காவினை தொகை ரூ.26.00 இலட்சம் மதிப்பீட்டிலும் மேம்படுத்துதல் பணி செய்திட விரிவான திட்ட அறிக்கை மற்றும் கருத்துரு நகராட்சி நிரவாக மண்டல இயக்குநர், வேலூர் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை 28 அவர்களுக்கு மேலனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண்.1368/2022/இ1)** | அனுமதிக்கப்பட்டது. |
| **29.04.2022** | **<u>பொருள் எண்.82</u>**<br>தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2022-23 -ன்படி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நகராட்சி நிர்வாக மான்ய கோரிக்கையின் போது, வரிசை எண்.20 மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் நவீன எரிவாயு தகனமேடை ரூ.67.50 கோடி மதிப்பீட்டில் புதியதாக அமைக்க / மேம்படுத்த உத்தேசிக்கப்படும் என தெரிவித்ததின் பேரில், இராணிப்பேட்டை நகராட்சியில் உள்ள எரிவாயு தகனமேடையினை LPG மூலம் பயன்படுத்த மேம்பாடு செய்யும் பணிக்கு ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள கருத்துரு அனுப்பி வைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை -28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20543/2021/தி2-3 நாள் 22.04.2022 கடிதம் மன்ற பார்வைக்கும் பணி மேற்கொள்ள ஒப்புதலுக்கும்.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண்.1369/2022/இ1)** | நகர்மன்றத் தீர்மான எண். 82 அனுமதிக்கப்பட்டது. |
| **29.04.2022** | **<u>பொருள் எண்.83</u>**<br>இந்நகராட்சியில் வார்டு எண். 25 குமாரசாமி மடம் பாலாற்றங்கரை சுடுகாட்டு பகுதியில் JCB இயந்திரம் கொண்டு சுத்தம் செய்தல், வார்டு எண். 24 புலித்தெரு பகுதியில் மூன்று சிறுபாலங்கள் பழுது பார்த்தல் பணி, வார்டு எண்.10 கே.கே. நகர் பகுதியில் சிறுபாலம் பழுது பார்த்தல் பணி, வார்டு எண். 10 சீனிவாசன்பேட்டை காமராஜர் தெரு பகுதியில் சிறுபாலம் பழுது பார்த்தல் பணி மற்றும் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் PUSH CART ( தள்ளுவண்டிகள்) 40 எண்ணிக்கை பழுது பார்க்கவும் மற்றும் வார்டு எண்.29 பாரி காலனி பகுதியில் குடிநீர் விநியோகக் குழாய் புதியதாக பதித்தல், வார்டு எண்.10 பழைய திருத்தணி சாலை பகுதியில் சீனிவாசன் பேட்டைக்குச் செல்லும் பிராதன குடிநீர் விநியோகக் குழாயினையும், லம்பா காலனி மேநீர் தேக்கத் தொட்டியிலிருந்து வரும் பிரதான | நகர்மன்றத் தீர்மான எண். 83 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | குடிநீர் விநியோகக் குழாயினையும் இணைத்தல் பணி, வார்டு எண். 6 பாட்டைத் தெரு பகுதியில் பழைய குடிநீர் விநியோக GI பைப் குழாயினை அகற்றி புதியதாக PVC பைப் அமைத்தல் பணி, வார்டு எண்.19 பள்ளத் தெரு பகுதியில் புதியதாக குடிநீர் விநியோகப் குழாய் அமைத்தல் ஆகிய பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>**(ந.க.எண். /2022/இ1)** | |
| **29.04.2022** | **பொருள் எண்.84**<br>மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்கள் 2022–23 ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாகத் துறை மான்ய கோரிக்கையின் போது மண்சாலைகளை அனைத்து பருவ காலத்திலும் பயன்படுத்தும் விதத்தில் தார்சாலை, கான்கிரிட் அல்லது பேவர்ப்ளாக் சாலைகளாக மாற்றப்படும் என அறிவித்ததின் பேரில் இராணிப்பேட்டை நகராட்சியில் உள்ள மண்சாலைகளை தரம் உயர்த்த கருத்துரு சமர்பிக்க தெரிவித்துள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை–28 அவர்களின் கடிதம் ந.க.எண்.9326/2021/இ1, நாள் 23.04.2022 மன்ற பார்வைக்கும் இதன்படி கீழ்கண்ட விவரப்படியான சாலைகள் தேர்வு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் | நகர்மன்றத் தீர்மான எண். 84 அனுமதிக்கப்பட்டது. |

| S.No | Name of the Work | Unicode | Length of road in m | Width of Road in m | Tentative Estimate Amount in Lakhs |
|---|---|---|---|---|---|
| | Proposed BT Road | | | | |
| 1 | எம்.ஜி.ஆர் தெரு | 031009RO132 | 97.00 | 5.00 | 7.28 |
| 2 | ஜெகஜீவராம் நகர் | 0310010RO162 | 335.00 | 5.50 | 27.64 |
| 3 | பார்க் ரோடு | 0310016RO238 | 53.00 | 6.00 | 4.77 |
| 4 | குட்ஷெட் ரோடு சந்து | 0310016RO241 | 73.50 | 7.00 | 7.72 |
| 5 | துய்மைபணியாளர் குடியிருப்பு பின்பகுதி | 0310017RO276 | 9.00 | 5.50 | 0.74 |
| 6 | துய்மைபணியாளர் குடியிருப்பு பின்பகுதி | 0310017RO277 | 221.00 | 4.50 | 14.92 |
| 7 | எக்ஸ்டென்ஷன் மெயின் தெற்கு குறுக்கு சந்து II | 0310027RO381 | 42.00 | 5.50 | 3.47 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | எக்ஸ்டென்ஷன் மெயின் தெற்கு குறுக்கு சந்து III | 0310027RO383 | 68.00 | 6.00 | 6.12 | |
| | | 9 | எக்ஸ்டென்ஷன் மெயின் தெற்கு குறுக்கு சந்து III | 0310028RO402 | 61.00 | 5.00 | 4.58 | |
| | | 10 | சங்கர் நகர் முதல் குறுக்கு சந்து | 0310028RO405 | 26.00 | 4.50 | 1.76 | |
| | | 11 | சங்கர் நகர் மூன்றாவது குறுக்கு சந்து | 0310028RO406 | 115.00 | 5.00 | 8.63 | |
| | | 12 | சங்கர் நகர் 2வது மெயின் ரோடு | 0310028RO408 | 68.00 | 4.50 | 4.59 | |
| | | | **Proposed Paver Block Road** | | | | | |
| | | 13 | மசூதி குறுக்கு தெரு III | 031001RO18 | 60.00 | 4.50 | 4.86 | |
| | | 14 | கிரேட் நகர் மெயின் கிராஸ் I | 031005RO75 | 48.00 | 6.80 | 5.88 | |
| | | 15 | கிரேட் நகர் 10வது குறுக்கு சந்து | 031005RO86 | 41.00 | 5.50 | 4.06 | |
| | | 16 | கிரேட் நகர் 10வது குறுக்கு சந்து | 031005RO87 | 26.00 | 6.00 | 2.81 | |
| | | 17 | கிரேட் நகர் 6 வது குறுக்கு சந்து | 031005RO92 | 41.00 | 4.50 | 3.32 | |
| | | 18 | டீ கடை தெரு | 031008RO112 | 32.00 | 6.50 | 3.74 | |
| | | 19 | ரைஸ் மில் தெரு | 031008RO116 | 39.00 | 4.50 | 3.16 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20 | பஜனை கோயில் தெரு கிராஸ் I | 031008RO121 | 56.00 | 6.00 | 6.05 |
| 21 | குவார்ட்டர்ஸ் தெரு 3வது குறுக்கு சந்து | 0310010RO152 | 72.00 | 5.50 | 7.13 |
| 22 | ஜெயராம்பேட்டை மேற்கு குறுக்கு சந்து II | 0310011RO186 | 37.00 | 4.50 | 3.00 |
| 23 | புதுத்தெரு வடக்கு முதல் குறுக்கு சந்து | 0310019RO291 | 79.00 | 5.00 | 7.11 |
| 24 | புதுத்தெரு வடக்கு 2வது குறுக்கு சந்து | 0310019RO292 | 18.00 | 5.00 | 1.62 |
| | **TOTAL** | | **1717.50** | | **144.96** |

<u>**அலுவலக குறிப்பு**</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1370 /2022/இ1)**

| | | |
|---|---|---|
| **29.04.2022** | <u>**பொருள் எண்.85**</u><br>மாண்புமிகு நகராட்சிகள் நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு எண். 21–ன்படி நகராட்சிகளில் உள்ள சந்தைகளை மேம்பாடு செய்யப்படும் என தெரிவித்ததின் பேரில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாரச்சந்தை வளாகத்தில் தினசரி மொத்த விற்பனை மற்றும் சில்லரை விற்பனை வளாகம் அமையும் விதத்தில் மேம்பாடு செய்ய ரூ. 16.00 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்க தனியர் கலந்தாலோசகரை நியமிக்கவும் இதற்கான கட்டணம் செலுத்தவும் மன்ற ஒப்புதலுக்கு.<br><u>**அலுவலக குறிப்பு**</u><br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்கண்ட தொகை பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதிக்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 85 அனுமதிக்கப்பட்டது. |
| **29.04.2022** | <u>**பொருள் எண்.86**</u><br>மாண்புமிகு நகராட்சிகள் நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு எண். 21–ன்படி நகராட்சிகளில் உள்ள சந்தைகளை மேம்பாடு செய்யப்படும் என தெரிவித்ததின் பேரில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாரச்சந்தை வளாகத்தில் தினசரி மொத்த விற்பனை மற்றும் சில்லரை விற்பனை வளாகம் அமையும் விதத்தில் மேம்பாடு செய்ய ரூ. 16.00 கோடி மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயாரித்து அனுப்ப மன்ற ஒப்புதலுக்கு.<br><u>**அலுவலக குறிப்பு**</u> | நகர்மன்றத் தீர்மான எண். 86 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதிக்கலாம். | |
| **29.04.2022** | **<u>பொருள் எண்.87</u>**<br>மாண்புமிகு நகராட்சிகள் நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற மான்ய கோரிக்கையின் போது சந்தை மேம்பாடு செய்ய அறிவித்ததின்பேரில், இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வாரச்சந்தை மேம்பாடு செய்யப்படும் இடத்தில் மண்ணின் தரம் அறிந்து கொள்ளும் விதத்தில் அரசு பொறியியல் கல்லூரி மூலம் மண் பரிசோதனை செய்ய முதல்வர் அரசு பொறியியல் கல்லூரி தர்மபுரி அவர்கள் கடிதம் Lr.No. GCE/DD1/CIVIL / Soil / 2022 /C-053 நாள் 26.04.2022-ல் மண்பரிசோதனை கட்டணம் ரூ.21240/- (வரிகள் உட்பட) செலுத்த மன்ற ஒப்புதலுக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்கண்ட தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம். | நகர்மன்றத் தீர்மான எண். 87 அனுமதிக்கப்பட்டது. |

ஒம்./- க. சுஜாதா வினோத்,
நகர்மன்றத் தலைவர்
இராணிப்பேட்டை நகராட்சி